செ.வெ.எண்: 52 நாள்: 25.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

பிரதமமந்திரி வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் புதுப்பள்ளி ஊராட்சி மேற்கு எம்.ஜி.ஆர்.நகர், கருங்கண்ணி ஊராட்சி மகிழி கிராமம், மற்றும் எட்டுக்குடி ஊராட்சி கரும்பூரான் தெரு ஆகிய பகுதிகளில் பிரதம மந்திரி வீடுகள் கட்டும் பணிகளையும், திருக்குவளை ஊராட்சியில் ஒன்றிய பொது நிதியின் கீழ் பண்டாரவாடை சாலை ரூ.4.13 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள பணிகளையும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.

மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் புதுப்பள்ளி மேற்கு ஊராட்சி எம்.ஜி.ஆர் நகரில் ரூ.1.45 இலட்சம் மதிப்பீட்டில் 2 மாட்டுக் கொட்டகை அமைக்கப்பட்டதையும், கருங்கண்ணி ஊராட்சி மாதா கோவில் கிழக்கு சாலை ரூ.5.94 இலட்சம் மதிப்பீட்டில் 115 மீ தூரம் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்ட பணியினையும், எட்டுக்குடி ஊராட்சி அரசுத் தொழிற்பயிற்சி நிலைய சாலை ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் கப்பிச் சாலையாக மாற்றப்பட்ட பணியினையும், கிழக்குத் தெரு பேவர் பிளாக் சாலை ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் 30 மீ தூரம் அமைக்கப்படும் பணி மற்றும் எட்டுக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சுற்றுச்சுவர் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற இருக்கும் பணிகளையும், பள்ளி மாணவர்களுக்கு கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக எட்டுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் வகுப்பறைகள், பள்ளி வளாகம், கழிவறைகள், மற்றும் குடிநீர் வசதி போன்றவைகள் குறித்து ஆய்வு செய்தபின் தலைமையாசிரியரிடம் உரிய ஆலோசனைகளை வழங்கி மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் திரு.செல்வராஜ், ஒன்றியப் பொறியாளர்கள் திரு.எஸ்.வெற்றிவேல், திரு.பி.சுகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கி.செந்தில், திரு.எஸ்.ராஜ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**